கூடாது என்று எண்ணுகிறோமோ, விரும்புகிறோமோ அதற்கு இடம் அளிக்கிற வகையிலே தான் இது கொண்டு செல்லும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆகவே எண்ணிக்கையை பொறுத்த வரையில் தெளிவான ஒரு முடிவிற்கு வரவேண்டும். கிராம சங்கங்களுக்கு ஒன்பதிற்கு மேலே போகக் கூடாது; அபெக்ஸ் சொசைட்டிக்கு 15-க்கு மேலே போகக் கூடாது. மாவட்ட வங்கிகள் போன்ற அமைப்புகள் என்றால் அதற்கு 21ற்கு மேலே போகக்கூடாது என்ற அடிப்படையில் எண்ணிக்கையை தீர்மானித்து இந்த சட்டத்தை நிறைவேற்றுவது சரியாக இருக்கும். 5-ல்லிருந்து 15, 7-லிருந்து 21 என்கிற அளவிற்கு இடம் அளிக்கக்கூடாது ஏனென்றால் பின்னாலே இவர்கள் 7 பேர்கள் என்று நிர்ணயிப்பார்கள்; 10 பேர்கள் என்று நிர்ணயிப்பார்கள்; ஒரு குறிப்பிட்ட நபர் அந்த பதவிக்கு வரமுடியவில்லை என்றால் பை-லாவிலே ஏதாவது திருத்தத்தை போட்டு கொஞ்சம் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம் என்ற நிலை மைகள் உருவாகும் என்கிற காரணத்தாலே, எண்ணிக்கையை திட்டவட்டமாக நிர்ணயிக்கவேண்டும். ஆதார சங்கங்களிலிருந்து மாநில சங்கம் வரையில் இருக்கிற அமைப்புகளுக்கு எண்ணிக்கை தீர்மானமாக வைத்து, அதற்கு மேல் போகக்கூடாது என்ற அடிப்படையில் சட்டத்தில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணி 1-28 ஆகிவிட்டது; இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுங்கள். ஒரு அறிவிப்பு ஒன்றை அவைக்கு அளிக்க வேண்டும். சீக்கிரத்தில் முடித்து விடுங்கள்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே நான் ஒருவன் தான் என் கட்சியில் பேசுகிறேன். நாளைக்கு தொடர் வதற்கு அனுமதிக்க வேண்டும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பில்லை பற்றி மட்டும் பேசி இருந்தால் முடித்திருக்கலாம்; மீண்டும் நாளைக்கு வாய்ப்பு என்பது நாளைக்கு வருகிற நிகழ்ச்சி நிரலை பொறுத் துத்தான். எந்த இடையூறுகளும் இன்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தீர்கள். ஆகவே நேரம் இருந்தால் பார்க்கலாம்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) (i) ஷெரீப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

(ii) பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1983.

(iii) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1983 பிப்ரவரி 12] [பேரவைத் தலைவர்]

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது:—

(i) 1983-ஆம் ஆண்டு ஷெரிப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1983).

(ii) 1983-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1983).

மேலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1983) ஆய்வு செய்யப்பெற்று, பரிந்துரை ஏதுமின்றி, திருப்பி அனுப்பப் பெற்றதாகவும், மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 14—2—1983-ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

—ஏதுவுமில்லை—

(ஆ) அறிக்கைகள். அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

29. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1983) நகலும், இணைப்பும்.

30. 1983-ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1983).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS